# 14.ஊரக மின்மயமாக்கல்

ஊரக மின்மயமாக்கும் திட்டங்களின் செயல்பாட்டில் தமிழக அரசு அரசாணை எண்.75 ஊரக வளர்ச்சி நாள்.4.3.97ன் மூலம் அ) கிராமப்புறங்களில் தெரு விளக்குகள் பராமரித்தல், புதிய விளக்குகள் மற்றும் புதிய மின் இணைப்புகள் வாங்குதல் ஆகிய பொறுப்புக்களை கிராம ஊராட்சிகளுக்கும், ஆ) ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் அரசு ஆகியவற்றால் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும், குறிப்பாக நீரிறைக்கும் விசை பம்புகளுக்கு மின்சாரம்

வழங்குதல், ஆதி திராவிடர் குடியிருப்புக்கள் மற்றும் குடிசைகளுக்கான ஓர் விளக்கு திட்டத்தின் கீழ் நடைபெறும் திட்டங்களை கண்காணித்தல் மற்றும் மேல் ஆய்வு செய்தல் ஆகிய பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியத்திற்கும், இ) மாவட்டத்தில் ஊரக மின்மயமாக்கல் சம்பந்தமான அனைத்து அரசுத் திட்டங்களையும் நிறைவேற்றல் மற்றும் ஆய்வு செய்தல், போன்ற பொறுப்புகளை மாவட்ட ஊராட்சிகளுக்கும் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் , இப்பொருள் குறித்து, பரிசீலனை செய்து, விவாதத்தின் அடிப்படையில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் கீழ்க்கண்ட பொறுப்புகளை வழங்க குழு பரிந்துரைக்கிறது.

## கிராம ஊராட்சிகள்.

1. தெரு விளக்குகளை பராமரிக்கும் பொறுப்புகள் கிராம ஊராட்சிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தெரு விளக்குகளுக்கான மின்கட்டணங்களை அந்தந்த ஊராட்சிகள் செலுத்தி வருகின்றன. நிதி ஆதாரம் குறைவாக உள்ள கிராம ஊராட்சிகளுக்கு, அவ்வூராட்சிகள் தெருவிளக்குகள் பராமரிப்பது போன்ற அடிப்படை பொறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்ள சமன்பாடு மற்றும் ஊக்க நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யலாம்.

2. ஒரு குடிசைக்கு ஒரு மின்விளக்கு திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதியான குடியிருப்புகளின் பட்டியல் மற்றும் மில்லியன் கிணறு திட்டத்தின் கீழ் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு பெற வேண்டிய பயணாளிகள் குறித்த விவரத்தை கிராம ஊராட்சிகள் தமிழ்நாடு மின்வாரியத்திற்குத் தெரிவிக்க வேண்டும். இணைப்புக்கள் கொடுக்கப்பட்ட விவரத்தை, மின் துறை, பயனாளிகளுக்கு மின் இணைப்புக்கள் வழங்கும் தகவல்களை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு மின்வாரியம் தெரிவிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயற்பொறியாளர்கள் இப்பணிகளுக்கு பொறுப்பாளர்களாக ஆக்கலாம்.

3. மின்சார திருட்டை கண்டறியும் பொறுப்பினை கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைப்பு செய்யலாம். இப்பணிகளை ஊராட்சிகள் செவ்வனே செய்ய தமிழ்நாடு மின்சார வாரியம் கிராம ஊராட்சிகளுக்கு தக்க சன்மானம் வழங்கலாம்.

4. மின் அழுத்த மாற்றி (Transformers) மற்றும் மின்கம்பங்கள் அமைப்பதற்கான இடங்களை முடிவு செய்யும் போது தமிழ்நாடு மின்சார வாரியம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளை கலந்தாலோசித்த பின்னரே முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. (அ) மின்சக்தி மூலம் வேளாண்மை, குடிநீர் ஆதாரங்கள் மேம்படுத்துதல் மற்றும் பம்பு செட்டுகள் நிறுவுவதல், (ஆ) தெருவிளக்குகள் அமைத்தல் மற்றும் (இ) ஒரு குடிசைக்கு ஒரு மின்விளக்கு வழங்குதல் போன்ற திட்டப் பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் ஆய்வு செய்யும் பொறுப்புகளை ஒப்படைக்கலாம். மின்துறையின் சம்பந்தப்பட்ட பொறியாளர், ஊராட்சி ஒன்றிய குழுவின் மின்துறை பணி சார்ந்த ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து, அந்தந்தப் பகுதிகளுக்கு தேவைப்படும் மின்சார அளவு, தற்போது வழங்கப்படும் மின்சக்தி, உடனடித் தேவையாக உள்ள புதிய நிர்மானப் பணிகள் ஆகியவை சார்ந்த புள்ளி விவரங்களைப் பெற்று, மாவட்ட அளவில் தொகுத்து, ஆராய்ந்து மாவட்டம் முழுமைக்கும் தேவையான மின்சாரம் சீராகக் கிடைக்கும் பொருட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு பரிந்துரை செய்யலாம்.

2. கிராமபுறங்களில் வழங்கப்படும், ஒரு குடிசைக்கு ஓர் மின் விளக்கு திட்டத்தின் கீழ் தேவையான புள்ளி விவரங்களை பெற்று மாவட்ட அளவிலான திட்டங்களைத் தீட்டுவதிலும், மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்த தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பங்கேற்பை பெற்று ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

3. கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து கிடைக்கப்பெறும் விவரங்களைக் கொண்டு, விவசாய பெருமக்கள் பயன்படுத்தும் மின் பம்பு செட்டுக்கான மின்சாரம் வேளாண்மை உற்பத்திக்காக சீராக கிடைக்க, தமிழ்நாடு மின்வாரியத்துக்கு பரிந்துரை செய்யலாம்.

4. மாவட்டத்தில் உருவாக்கப்படுகின்ற மின் திட்டப் பணிகளை ஆய்வு செய்து வழங்கப்படும் மின்சாரத்தின் தரத்தை உயர்த்தவும் மற்றும் சீரான விநியோகம் செய்வதற்கும் அறிவுரைகள் வழங்கும் பொறுப்புகளை வழங்கலாம் என்று குழு பரிந்துரை செய்கிறது.